முதன்மைச் செயலர்/ஆணையர் (வ.வ.)
29 ஏப் 2016
எழிலகம், சென்னை–600 005

முதன்மை ஆணையர் (வ.தொ.)
சேப்பாக்கம்
29 ஏப் 2016
சென்னை–600 005

**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – ''மனிதன்'' தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண். 137**

**நாள்: 29.04.2016**
**துர்முகி, சித்திரை 16,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. சென்னை உயர்நீதிமன்றத்தின் 25.04.2016–ஆம் நாளிட்ட ஆணை (நீதிமன்ற பேராணை எண்.15187/2016).
4. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/10149/2016, நாள் 28.04.2016 தேர்வுக்குழு எண்.03/2016–2017.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர், தமது 28.04.2016 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு ''மனிதன்'' திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களில், அலுவல் சார்ந்த உறுப்பினர் திரு.M.பரமேஸ்வரன், இணை ஆணையர்(வவ), வணிகவரித் துறை, சென்னை (மையம்) கோட்டம், சென்னை–6,

திரு.ம.சி.தியாகராஜன், துணை இயக்குநர் (நிர்வாகம்), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8 மற்றும் அலுவல் சாரா உறுப்பினர் திருமதி.ராஜஸ்ரீ, பழம்பெரும் நடிகை ஆகிய மூவரும் “மனிதன்” என்ற திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளனர் என்றும், அலுவல் சாரா உறுப்பினர்கள் திரு.பாபு என்கிற N.V.அனந்த கிருஷ்ணன், ஒளிப்பதிவாளர் மற்றும் திரு.C.V.ராஜேந்திரன், இயக்குநர் ஆகிய இருவரும் “மனிதன்” என்ற திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதியானது என பரிந்துரை செய்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

3. “மனிதன்” தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண். | உறுப்பினர் திருவாளர்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 1. | M. பரமேஸ்வரன்,<br>இணை ஆணையர் (வவ),<br>வணிகவரித் துறை,<br>சென்னை (மையம்)<br>கோட்டம், சென்னை–6 | வரி விலக்கு கோரும் இத்திரைப்படம் தணிக்கை வாரியத்திடமிருந்து ‘U’ சான்றிதழ் பெற்றுள்ளது. திரைப்படத்தின் தேவையை கருதி பிற மொழிகளை பயன்படுத்தும் காட்சிகளைத் தவிர பெருமளவில் திரைப்படத்தின் வசனங்கள் தமிழ் மொழியில் உள்ளது. திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசங்கள் அதிக அளவில் இடம் பெறவில்லை.<br><br>திரைப்படத்தின் கதையில் கருவானது தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் வளர்ச்சிக்காக கீழ்கண்ட காரணங்களால் உகந்ததாக இல்லை:<br><br>1. நீதிமன்றத்தில் நடைபெறும் நிகழ்வுகள் கடைத்தெருவில் நடக்கும் நிகழ்வுகள் போல் உள்ளது.<br>2. நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கறிஞர் அவர்களிடம் OMR ல் உள்ள 3BR- Flat வேண்டும் என கேட்பது போன்ற கேவலமான நிகழ்வுகள் ஏற்புடையதல்ல.<br>3. நீதிமன்ற வளாகத்தில் ஒரு தேனீர் கடைக்காரர் வக்கீலை அடித்தல்.<br>4. நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க காவல்துறை ஒருவரை நியமித்த முறை நடைமுறைக்கு ஒவ்வாததாக உள்ளது.<br>5. நீதிமன்றத்தில் நடந்த சண்டைக்காட்சி (1) வழக்கறிஞருக்கும் V/S நீதிபதிக்கும் (2) இரு வழக்கறிஞருக்கும் இத்திரைப்படத்தில் வைக்கப்பட்டுள்ளது நீதிமன்றத்தையே அவமதிப்பு செய்வதாகும். |

| | | |
|---|---|---|
| | | 6. அகல் விளக்கு மூலம் வழக்கறிஞர் சிகரெட்டை பற்றவைத்தல்.<br>மேலே சொல்லப்பட்ட காரணங்களால், **இத்திரைப்படம் கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரைக்கிறேன்.** |
| 2. | ம. சி. தியாகராஜன்,<br>துணை இயக்குநர் (நிர்வாகம்),<br>தமிழ் வளர்ச்சி இயக்ககம்,<br>சென்னை 8 | இப்படம் 'U' சான்றிதழ் பெற்றுள்ளது. படத்தில் வன்முறை, ஆபாசம் இல்லை. பிற மொழி கலப்பு குறிப்பிடும்படி இல்லை. தமிழ் பண்பாட்டிற்குரியதாக உள்ளது.<br>எனினும் படத்தின் தலைப்பு 'மனிதன்' என்பது சமசுகிருதச் சொல். **எனவே வரி விலக்கு வழங்க பரிந்துரைக்க இயலவில்லை.**<br>மனிதன் என்பதற்கு மாந்தன், மாந்தர் என்பதே தமிழ்ச் சொல் ஆகும். |
| 3. | பாபு என்கின்ற<br>N.V. அனந்தகிருஷ்ணன்,<br>ஒளிப்பதிவாளர் | 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம். தலைப்பு தமிழில் உள்ளது. ஆபாசம், வன்முறை இல்லை. தமிழ் சீராக உள்ளது. மேற்கண்ட அரசாணையின் நிபந்தனைக்கு உட்பட்டு உள்ளதால் **கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது என்று பரிந்துரைக்கிறேன்.** |
| 4. | C.V. ராஜேந்திரன்,<br>இயக்குநர் | 'U' சான்றிதழ் உள்ள திரைப்படம். தமிழ் பண்பாட்டிற்கு உள்ள திரைப்படம். ஆபாசமோ, வன்முறையோ இல்லாமல், ஒரு நல்ல கருத்தை சொல்லி இருக்கிறார்கள். **வரி விலக்கு அளிக்க பரிந்துரைக்கிறேன்.** |
| 5. | ராஜஸ்ரீ,<br>பழம்பெரும் நடிகை | நீதிமன்ற காட்சியில் வழக்கறிஞர் திரு ஆதிசேஷன் அவர்கள் நீதிபதி அவர்களை ஆவேசப்படுத்தி, அவரை தன்னிலை இழக்கச் செய்து, கையில் கிடைத்ததை எடுத்து எரியுமளவிற்கு வழக்கறிஞரின் நடவடிக்கைகள் இருந்தன. இவை நீதிமன்றத்தையும், நீதிபதி அவர்களையும் அவமதிக்கும் வகையில் இருந்தது. நடைமுறைக்கு ஒவ்வாததாகவும், நீதிமன்றத்தின் மேல் பொதுமக்களின் நம்பிக்கையை இழக்கும் வகையிலும் இருப்பதால், இப்படம் அரசாணை நிபந்தனைக்கு உட்படாததால், **கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என்ற எனது முடிவினை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.** |

4. "மனிதன்" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களில் மூன்று உறுப்பினர்கள் அத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்களிக்க தகுதியானது அல்ல என்றும், இரண்டு உறுப்பினர்கள் கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதியானது என்றும் பரிந்துரை செய்துள்ளனர். பெரும்பான்மையான உறுப்பினர்கள் மேற்கண்ட திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்களிக்க பரிந்துரை செய்யவில்லை என்பதால், "மனிதன்" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசீமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ).

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/4/16
பிரிவு அலுவலர்.
29/4/2016